**குளித்தலை நகராட்சி**

03.11.2021.ஆம் தேதி புதன்கிழமை மாலை 5.00 மணிக்கு
நகராட்சி ஆணையர் அறையில் நடைபெற்ற அவசரக்கூட்டம்

ப.சுப்புராம்,
ஆணையர் மற்றும் தனி அலுவலர்,
குளித்தலை நகராட்சி.

-------

பொருள்– 01. இந்நகராட்சி (2021–2024 ஆண்டுக்கான உரிமம்) நவீன கழிவறையில் தினசரி கட்டணம் வசூல் செய்துகொள்ளும் உரிமத்திற்கு 03.11.2021.ஆம் தேதியில் பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. இதில் கீழ்க்கண்டவாறு பொது ஏலத்தில் ஓராண்டிற்கு உச்ச ஏலக்கேள்வி கேட்கப்பட்டது. அதன் விபரம்,

| | | | |
|---|---|---|---|
| 1) | திரு.சு. சிவவேந்தன், த/பெ.சுப்பிரமணியம், 2/35,புதுப்பாளையம், வைகைநல்லூர் அஞ்சல் | ரூ. | 1,39,500/– |
| 2) | திரு.ஏ.சக்திவேல், த/பெ.ஏகாம்பரம், 3/68B, கோட்டமேடு, வைகைநல்லூர் அஞ்சல் | ரூ. | 1,40,000/– |

மேற்காணும் இனத்திற்கு ஒப்பந்தப்புள்ளி ஏதும் வரவில்லை. மேலும் உயர்ந்தபட்ச ஏலக்கேள்வியாக திரு.ஏ.சக்திவேல் என்பவர் ரூ.1,40,000/–க்கு ஏலம் கேட்டுள்ளார். இது சென்ற ஆண்டு உரிமத் தொகையைவிட ரூ.11,007/– மற்றும் மூன்று ஆண்டு சராசரி உரிமத் தொகையை காட்டிலும் ரூ.17,052/– கூடுதலாக உள்ளது. எனவே, திரு.ஏ.சக்திவேல் என்பவரது உயர்ந்தபட்ச ஏலக்கேள்வியை ஊர்ஜிதம் செய்ய மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு– மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
(ந.க.எண்.1769/2020/அ1)

பொருள்– 02. குளித்தலை நகராட்சி தினசரி சாலையோர சுங்கம் வசூல் செய்யும் உரிமத்திற்கு 2020–2021 முதல் 30.09.2021 வரை ரூ.15,77,291/– குத்தகை தொகை திரு.வீ.கண்ணன் என்பவரால் செலுத்தவில்லை. பலமுறை தொகை செலுத்தக்கோரியும் குத்தகை தொகை செலுத்தாத காரணத்தால், கரூர் மாவட்ட நீதிமன்றத்தில் முன்னாள் குத்தகைதாரர் திரு.வீ.கண்ணன் என்பவர்மீது வழக்கு தொடர அரசு வழக்கறிஞரின் 02.11.2021.ஆம் தேதியிட்ட கடிதத்தில், நீதிமன்ற கட்டணம், வக்காலத்து ஆவணங்கள் தயார் செய்ய மற்றும் பகுதி வழக்கறிஞர் கட்டணம், ஆகமொத்தம் ரூ.59,829/– வழங்க கோரியுள்ளார். மேற்கண்ட தொகை வழங்கவும், திரு.ஆர்.குடியரசு, அரசு வழக்கறிஞர்வசம் கோப்பு ஒப்படைத்து வழக்கினை நடத்த மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– 1). மன்றம் அனுமதிக்கலாம்.
2). அவசர அவசியம் கருதி, தனி அலுவலர் முன்அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதையும், தொகை வழங்கியதையும் அங்கீகரிக்கலாம்.
(ந.க.எண்.1812/2021/அ1)

பொருள்– 03. குளித்தலை நகராட்சி பேருந்து நிலைய இருசக்கர வாகனம் நிறுத்துமிடம் வசூல் செய்யும் உரிமம், பேருந்து நிலைய கழிவறை கட்டணம் வசூல் செய்யும் உரிமம் மற்றும் ஆடுவதை சாலை உரிமம் ஆகிய இனங்களின் குத்தகைதாரர்கள் 01.04.2021 முதல் 30.09.2021 வரை உரிமத் தொகை செலுத்தாததால் அரசு வழக்கறிஞர் திரு.கே.எஸ்.எம்.சாகுல்அமீது மூலம் வழக்கறிஞர் நோட்டீஸ் அனுப்புவதற்கு செலவினத் தொகை ரூ.3,000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– 1). மன்றம் அனுமதிக்கலாம்.
2). அவசர அவசியம் கருதி தனி அலுவலர் முன்அனுமதி பெற்று நடவடிக்கை மற்றும் அதற்கான செலவினம் மேற்கொண்டதை அங்கீகரிக்கலாம்.
(ந.க.எண்.1813/2021/அ1)

| | |
|---|---|
| பொருள்– 04. | குளித்தலை நகராட்சி சாதாரண நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தல்–2021.க்கு ஏற்படும் தேர்தல் உத்தேச செலவினம் ரூ.50,00,000/–க்கு (ரூபாய் ஐம்பது லட்சம் மட்டும்) மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. |
| அலுவலக குறிப்பு– | 1). மன்றம் அனுமதிக்கலாம்.<br>2). இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அங்கீகரிக்கலாம்.<br>(ந.க.எண்.1071/2021/அ1) |

*******

குளித்தலை நகராட்சி

03.11.2021.ஆம் தேதியஅவசரக்கூட்டத் தீர்மானங்களின் உண்மைநகல்

| வ. எண். | பொருள் எண். | தீர்மானம் எண். | தீர்மான விபரம் |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 | 1 | 262 | அனுமதிக்கப்பட்டது. |
| 2 | 2 | 263 | அனுமதிக்கப்பட்டது. |
| 3 | 3 | 264 | அனுமதிக்கப்பட்டது. |
| 4 | 4 | 265 | சாதாரண நகர்ப்புற உள்ளாட்சி தேர்தல்–2021.க்கு உத்தேச செலவினம் அனுமதிக்கப்பட்டது. |

ஒம்/–ப.சுப்புராம்,
ஆணையர் மற்றும் தனி அலுவலர்,
குளித்தலை நகராட்சி.

/ உண்மை நகல் /

ஆணையர்,
குளித்தலை நகராட்சி.